பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
25 02 2025 6 30
செவ்வாய்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நாட்டில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி உள்நாட்டு வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்டத்தில் கடந்த டிசம்பர் மாதத்தில் 16 லட்சத்திற்கும் அதிகமானோர் இணைந்துள்ளதாக மத்திய அசு கூறியுள்ளது.
- தமிழகத்தில் மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு விவகாரம் தொடர்பாக விவாதிக்க வரும் ஐந்தாம் தேதி அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார்.
- மத்திய அரசு ஹிந்தியை திணிக்கும் முயற்சியில் ஒருபோதும் ஈடுபடவில்லை என்று அக்கட்சியின் மூத்த தலைவர் திருமதி தமிழிசை சௌந்தர்ராஜன் தெரிவித்துள்ளார்.
- மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் தில்லி – குஜராத் அணிகள் மோதுகின்றன.

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

[]<<<>>>[]

போக்குவரத்து உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், உள்நாட்டு வர்த்தகத்துக்கு உத்வேகம் அளிக்கவும் மத்திய அரசு நடவடிக்கைகள் எடுத்து வருவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

அஸ்ஸாம் மாநிலம் குவாஹாத்தியில் சர்வதேச முதலீடு மற்றும் உள்கட்டமைப்பு மாநாட்டில் உரையாற்றிய பிரதமர், உற்பத்தித் துறையை விரிவுபடுத்தவும், குறைந்த செலவில் பொருட்களை தயாரித்து பயன்பாட்டுக்கு கொண்டு வரவும் அரசு முயற்சி எடுத்து வருவதாகத் தெரிவித்தார்.

அஸ்ஸாம் மாநிலத்தில் அமைதியை நிலைநாட்ட மத்திய மாநில அரசுகள் இணைந்து செயல்பட்டதால் பல்வேறு குழுக்களுடன் அமைதிக்கான ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது அம்மாநிலத்தில் முதலீடுகளை மேற்கொள்ளவும், தொழில்களை எவ்வித பிரச்சினையுமின்றி நடத்தவும் உகந்த சூழ்நிலையை மாநில அரசு ஏற்படுத்தி உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

2030-ஆம் ஆண்டுக்குள் அஸ்ஸாம் மாநிலத்தை ஒன்று புள்ளி ஐந்து பில்லியன் டாலர் பொருளாதாரமாக உயர்த்துவதற்குத் தேவையான கொள்கைகளையும் அம்மாநில அரசு வகுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

ரயில்வே பட்ஜெட்டில் அதிக அளவு நிதி ஒதுக்கப்பட்டு 60 ரயில் நிலையங்கள் நவீனமயமாக்கப் பட்டுள்ளதாகவும், விமான போக்குவரத்து வசதியும் செய்து தரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் அஸ்ஸாம் முதலீட்டாளர்கள் மாநாடு முக்கிய பங்கு வகிக்கும் என நம்புவதாக திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

[]<<<>>>[]

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்டத்தில் கடந்த டிசம்பர் மாதத்தில் 16 லட்சத்திற்கும் அதிகமானோர் இணைந்துள்ளதாக மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தைக் காட்டிலும் ஒன்பது புள்ளி ஆறு ஒன்பது சதவீதம் பேர் கூடுதலாக டிசம்பர் மாதத்தில் இணைந்திருப்பதாக அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

18 வயதிலிருந்து 25 வயதுக்கு உட்பட்ட தொழிலாளர்கள் நான்கு லட்சத்து 80 ஆயிரம் பேர் புதிதாக இணைந்திருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

ஒரே நாடு ஒரே தேர்தல் நடைமுறையை கொண்டு வருவதற்காக அமைக்கப்பட்டுள்ள கூட்டு நாடாளுமன்ற குழுவின் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் 27 மக்களவை உறுப்பினர்கள், 12 மாநிலங்களவை உறுப்பினர்கள் என மொத்தம் 39 பேர் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை பதிவு செய்தனர்.

சட்ட வல்லுநர்களுடன் இக்குழுவினர் இது குறித்து விவாதித்னர்.

[]<<<>>>[]

மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு விவகாரம் குறித்து விவாதிக்க தமிழகத்தில் வரும் ஐந்தாம் தேதி அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற தமிழக அமைச்சரவைக் கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை செய்தால் தமிழகத்தில் மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை 31-ஆக குறைந்துவிடும் என்றார்.

தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்துள்ள 40 கட்சிகளுக்கு அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - மு க ஸ்டாலின் ) -42--- செகண்ட்*

[]<<<>>>[]

பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான பிஜேபி அரசு ஒருபோதும் ஹிந்தியை திணிக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை என்று அக்கட்சியின் மூத்த தலைவர் திருமதி தமிழிசை சௌந்தர்ராஜன் தெரிவித்துள்ளார்.

கோவையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் ஆளும் திமுக அரசு மொழியை வைத்து அரசியல் செய்து வருவதாகக் குற்றம்சாட்டினார்.

தமிழகத்தில் பாலியல் குற்றங்கள் அதிகரித்துள்ளதாக அவர் குறை கூறினார்.

தமிழ் மொழியின் மேம்பாட்டிற்காக தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஆனால் பிஜேபி தமிழுக்கு எதிராக செயல்படுவதுபோல ஒரு தோற்றத்தை மாநிலத்தில் ஆளும் கட்சி ஏற்படுத்த முயற்சிப்பதாக அவர் குற்றம்சாட்டினார்.

தேசிய கல்விக் கொள்கையில் தாய் மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாகவும், திறன் வளர்ப்பு, தொழில்நுட்ப அறிவு, விரிவுபடுத்தப்பட்ட கல்வி என மாணவர்களுக்கு தேவையான அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கி இருப்பதாக அவர் தெரிவித்தார்.

ரயில் நிலையங்களில் ஹிந்தி எழுத்துக்களை அழிக்கும் நடவடிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும், பிற மாநிலங்களிலிருந்து வரும் பயணிகள் இதனால் பெரும் பாதிப்புக்கு உள்ளவதாகவும் திருமதி தமிழிசை சௌந்தர்ராஜன் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் உள்ள பள்ளிவாசல்களில் ரமலான் நோன்பு கஞ்சி தயாரிக்க ஏழாயிரத்து தொள்ளாயிரத்து 20 மெட்ரிக் டன் அரிசி வழங்க முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

பள்ளிவாசல்களுக்குத் தேவைப்படும் அரிசிக்கான மொத்த அனுமதியை வழங்குமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன்மூலம் அரசுக்கு 18 கோடியே 40 லட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

சென்னை, அம்பத்தூரில் நாலாயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ள சென்னை தகவல் தரவு மையத்தை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

சென்னை, கிண்டியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக அவர் இந்த மையத்தை திறந்து வைத்தார்.

சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர் மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி தொடங்கப்படும் இந்த மையத்தில் 500 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

சென்னை கோபாலபுரத்தில் மாநில இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் சார்பில் எட்டு கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள குத்துச்சண்டை அகாடமியையும் முதலமைச்சர் திறந்து வைத்தார்.

[]<<<>>>[]

2020-ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழக அரசு துறைகளில் நியமிக்கப்பட்ட தற்காலிக பணியாளர்களை நீக்குமாறு மாநில அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு ஒன்றை விசாரித்த நீதிபதிகள் திரு ஆர் சுப்ரமணியன், திரு அருள்முருகன் ஆகியோரைக் கொண்ட அமர்வு முன் ஊரக வளர்ச்சித்துறையின் கூடுதல் தலைமைச் செயலர் தரப்பில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.,

தற்காலிக பணி நியமனங்களை கைவிடுவது என 2020-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28-ஆம் தேதி பிறப்பிக்கப்பட்ட அரசாணையை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், இந்த தேதிக்குப் பிறகு நியமனம் செய்த அனைத்து தற்காலிக பணியாளர்களையும் நீக்க வேண்டுமென்று உத்தரவிட்டனர்.

அரசின் உத்தரவை மீறி பணி நியமனம் செய்த அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறும், அது குறித்து மார்ச் 17-ஆம் தேதிக்குள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென்றும் மாநில அரசுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

[]<<<>>>[]

பிரதமரின் விவசாயிகள் வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ் 19-வது தவணையாக தங்களது வங்கிக் கணக்குகளில் நேரடியாக உதவித்தொகையை பெற்ற மதுரை மாவட்ட விவசாயிகள் மத்திய அரசுக்கும், பிரதமர் திரு நரேந்திரமோடிக்கும் தங்களது நன்றியை தெரிவித்தனர்.

தங்கள் வாழ்வாதாரத்துக்கும், வளர்ச்சிக்கும் இந்த திட்டம் பெரும் உதவியாக இருந்து வருகிறது என்று விவசாயிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

*( சவுண்ட்பைட் - விவசாயிகள் ) ----37 --- செகண்ட்*

[]<<<>>>[]

கோவை வடக்குத் தொகுதி சட்டப்பேரவை அஇஅதிமுக உறுப்பினர் திரு அம்மன் அர்ஜுனன் இல்லத்தில் லஞ்ச ஒழிப்பு காவல்துறையினர் இன்று சோதனை நடத்தினர்.

[]<<<>>>[]

மகாசிவராத்திரி தினத்தையொட்டி கன்னியாகுமரி மாவட்டத்தில் வரலாற்று சிறப்புமிக்க சிவாலய ஓட்டம் இன்று தொடங்கியது.

சிவராத்திரியை முன்னிட்டு மாவட்டத்திற்கு நாளை உள்ளூர் விடுமுறை விடப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

ஈரோடு மாவட்டம் அந்தியூர் வனப்பகுதிகளில் கோடைக் காலத்தில் தீ விபத்து ஏற்பட்டால் அதனை எவ்வாறு அணைப்பது என்பது குறித்த விழிப்புணர்வு செயல்விளக்க முகாம் இன்று நடைபெற்றது.

[]<<<>>>[]

திருப்பத்தூரில் போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு பேரணி ஆட்சியர் திருமதி சிவ சௌந்தரவல்லி தலைமையில் இன்று நடைபெற்றது.

[]<<<>>>[]

அரியலூரில் காவல்துறையினர் மற்றும் பொதுமக்கள் பங்கேற்ற நல்லுணர்வு மாரத்தான் இன்று நடைபெற்றது.

[]<<<>>>[]

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம், தங்கச்சிமடம், பாம்பன், மண்டபம் உள்ளிட்ட கடலோர பகுதிகளில் இன்று காற்றுடன் கூடிய கனமழை பெய்தது. இதனால் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியது.

[]<<<>>>[]

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் தில்லி – குஜராத் அணிகள் மோதுகின்றன.

பெங்களூருவில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]

உலக இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டி நாளை குஜராத் மாநிலம் வதோதராவில் தொடங்குகிறது.

இந்திய வீரர்கள் 165 பேர் இப்போட்டியில் கலந்து கொள்கின்றனர்.

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, இலங்கை, கொரியா, ஆன்டிகுவா, பார்புடா உள்ளிட்ட நாடுகள் இப்போட்டியில் பங்கேள்கின்றன.

*End of News*